**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.312/2024 நாள்- 06.04.2026

**வா.சா.1. அஜித்குமார்**

**குறுக்கு விசாரணை 2, 3 பிரதிவாதிகள் தரப்பில்**

நான் என்ன வேலை பார்த்து வருகிறேன் என்று என்னுடைய பிராது மற்றும் நிரூபணவாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் பிராதில் கூறவில்லை. என் அப்பா என்னுடன் குடியிருக்கவில்லை. நானும் என் தாயாரும் தனித்தனியாக எனக்கு திருமாணம் ஆனதிலிருந்து குடியிருந்து வருகிறோம். என் தாயார் அரவிந்த் ஹெர்பல் மருத்துவமனையில் வேலை பார்த்து வருகிறார். வா.சா.ஆ.1- கடனுறுதிசீட்டு எழுதும் சமயத்தில் நான் இராஜபாளையம் மில்ஸ் பேப்ரிக்ஸ் டிவிசனில் டெக்னிசியனாக வேலை பார்த்தேன். 2018 ம் ஆண்டு முதல் இராஜபாளையம் மில்ஸ் பேப்ரிக்ஸ் டிவிசனில் டெக்னிசியனாக வேலை பார்த்து வருகிறேன். எனது சம்பளம் எனது வங்கி கணக்கில் தான் வரவு வைக்கப்படும் என்றால் சரிதான். பகுதி நேரமாக டெக்னிசியனாக வெளி நபர்களிடம் வேலை பார்த்து வருகிறேன். பகுதி நேரமாக டெக்னிசியனாக வெளி நபர்களிடம் வேலை பார்த்து வருவதாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை நான் நாளது தேதி வரை வருமானவரி கணக்கு தாக்கல் செய்யவில்லை. எனக்கு வருமான வரி அட்டை உள்ளது. எனது வங்கி கணக்கை பார்த்தால் எனக்கு ரூ.7,50,000/- கடன் கொடுக்கும் அளவிற்கு வரவு செலவு இருந்ததா என்று தெரிய வரும் என்றால் எனது சம்பளம் மட்டும் தான் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும். பகுதி நேர தொழில் வருமானத்தை ரொக்கமாகத்தான் பெற்று வந்தேன். 25.04.2021 அன்று நானும் என் தாயாரும் ஒரே குடும்பமாக தான் குடியிருந்து வந்தோம் என்றால் சரிதான் எங்கள் இருவருக்கும் அப்போதே தனித்தனி வரவு செலவு தான் இருந்தது. 1ம் பிரதிவாதியின் கணவர் மற்றும் 1ம் பிரதிவாதி என்ன வேலை பார்த்து வந்தார்கள் என்று பிராது மற்றும் நிரூபணவாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். என் தாயார் 1ம் பிரதிவாதிக்கும் அவரது கணவருக்கும் 21.03.2021 அன்று ரூ.530000/- கடன் கொடுத்ததாக குறிப்பிட்டு அ.வ.எண்.1045/2024 வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான் ஆனால் தொகை எவ்வளவு என்று எனக்கு தெரியாது. தாவா வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 3

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

கடனுறுதிசீட்டுகளையும் யார் எழுதினார்கள் யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்று குறிப்பிட்டு பிராதிலும், நிரூபணவாக்குமூலத்திலும் கூறவில்லை என்றால் சரிதான். கடனுறுதிசீட்டுகள் என்னுடைய வீட்டில் வைத்து எழுதப்பட்டது. இந்த விவரத்தை என்னுடைய பிராதில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். கடனுறுதிசீட்டில் சாட்சியும், எழுதியவராக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நபரும் கணவன் மனைவி என்றால் சரிதான். நான் சொன்ன குறிப்புகளின் அடிப்படையில் தான் கடனுறுதிசீட்டுகள் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சி கையொப்பம் செய்தவர்கள் பெரியப்பாவும், பெரியம்மாவும் ஆவார்கள். நான் அழைத்ததன் பெயரில் தான் பெரியப்பாவும், பெரியம்மாவும் என் வீட்டிற்கு வந்தார்கள் என்றால் பிரதிவாதிகள் தான் அழைத்து வந்தார்கள். 1ம் பிரதிவாதியும், அவரது கணவரும் என்ன வேலை செய்து வந்தார்கள் என்றால் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்ததாக கேள்வி பட்டுள்ளேன். எனக்கு வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் இல்லை. தனிப்பட்ட முறையில், 1ம் பிரதிவாதியும், அவரது கணவரும் எனக்கு பழக்கம் இல்லை என்றால் என் வீட்டிற்கு அருகில் உள்ள நபர்கள் வீட்டிற்கு வருவதால் எனக்கு பழக்கம் உண்டு. 2021ம் ஆண்டிற்கு 4 வருடங்களுக்கு முன்பாக எனக்கு பழக்கம். 1ம் பிரதிவாதிக்கும் அவரது கணவரும் எனக்கு யார் என்றே தெரியாது என்றும் எனக்கு பழக்கம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி மற்றும் பெடரல் வங்கிகளில் வங்கி கணக்கு உள்ளது. வங்கி கணக்கு அறிக்கைகளை நீதிமன்றத்தில் ஆவணமான தாக்கல் செய்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான் என்னிடம் ரூ.750000/- கடன் வாங்க வேண்டிய அவசியம் 1ம் பிரதிவாதிக்கும் அவரது கணவருக்கும் அவசியம் இல்லை என்றும் ரூ.750000/- கடன் கொடுக்கும் அளவிற்கு எனக்கு வசதியோ வருமானமோ இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கும் அவரது கணவருக்கும் மாத வருமானம் எவ்வளவு என்று எனக்கு தெரியாது எனது வழக்குப்படி பிரதிமாதம் தோறும் வட்டி கொடுப்பதாக கூறி கடன் வாங்கியதாக கூறுகிறேன் என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்கு ரூ.7500/- மாதம் வட்டி கொடுக்கும் அளவிற்கு வசதி வாய்ப்பு உள்ளதா என்று எனக்கு தெரியாது. பிரதிவாதிகளுக்கு வட்டி கொடுக்கும் அளவிற்கு வசதி வாய்ப்பு உள்ளதா என்று தெரியாமல் கடன் கொடுக்க மாட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. என்னை போன்று

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

பிரதிவாதிகளுக்கு கடன் கொடுத்த வகையில் பல வழக்குகள் இந்த நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான். 3 கடனுறுதிசீட்டுகளிலும் தொகை விவரங்கள் வேறு எழுத்துக்களும், மற்ற விவரங்கள் வேறு ஒரு நபரால் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். இந்த வேறுபாடு எதனால் ஏற்பட்டது என்று எனது பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 முதல் 3 கடனுறுதிசீட்டுகளில் கண்ட கையொப்பங்கள் 1ம் பிரதிவாதி மற்றும் அவரது கணவர் கையொப்பம் இல்லை என்றும் நான் பெரியம்மா பெரியப்பா ஆகியோர்களை வைத்து மோசடியாக உற்பத்தி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்கள் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்பதால் அதன் மூலம் எனக்கு எந்த நிவாரணமும் கிடைக்கக்கூடியதல்ல என்றும், 1ம் பிரதிவாதி மற்றும் அவரது கணவர் பெயரில் சொத்துக்கள் இருப்பதால் அதை அபகரிக்க வேண்டி பொய்யான ஆவணம் உற்பத்தி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

**2,3 பிரதிவாதிகளின் குறுக்கு விசாரணையை 1ம் பிரதிவாதி தரப்பில் ஏற்றுக் கொள்வதாக எடுத்துரைக்கப்பட்டது.**

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.